புங்கனூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.J.அம்பேத்கர்

ந.க.ஊ / 1 /2024 நாள்: 06/07/2024

பொருள்: மனைப்பிரிவுகள் - உள்ளாட்சிகளில் உத்தேச குடியிருப்பு இறுதி ஒப்புதல் அளித்தல் - திமிரி ஊராட்சி ஒன்றியம் புங்கனூர் ஊராட்சி திரு.நாமதேவன், (சர்வே எண் 169/1A, 169/1B, 170/1B2)-ல் 1.10 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு புதிய மனைப்பிரிவிற்க்கு இறுதி ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், இராணிபேட்டை அவர்களின் ம.வ./மா.ந.ஊ.அ. (இரா.மா) எண் 64/2024 நாள் 02/07/2024.
2. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த் துறை, நாள் 04/05/2017.
3. ஆய்வுக்கட்டணம் புங்கனூர் ஊராட்சி கணக்கு எண்.1-ல் செலுத்திய ரூ.1000/-க்கான ரசீது எண்:[illegible] நாள்: 06/07/2024.
4. நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.8910/- (DPC-0217-60-800-AS-22709) என்ற அரசு கணக்கில் செலுத்திய ரசீது எண்:20240704022283 நாள்04/07/2024
5.புங்கனூர் ஊராட்சி தீர்மான எண் 25 நாள் 05/07/2024

உத்திரவு

பார்வை(1) ல் குறிப்பிட்டுள்ள இராணிபேட்டை நகர் ஊரமைப்பு இணை இணக்குநர், அவர்களின் செயல்முறைகளின்படி திமிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புங்கனூர் ஊராட்சி கிராமம் திரு.நாமதேவன் என்பவரின் (சர்வே எண் 169/1A, 169/1B, 170/1B2) 1.10 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்க்கு இறுதி ஒப்புதல். பொது ஒதுக்கீடுகளையும், சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும், மின்சார டிரான்ஸ்பார்மர் அமைக்க தானபத்திர ஆவண எண் 5029/2024 நாள்-25/06/2024, மூலம் புங்கனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, இதற்கு புங்கனூர் ஊராட்சியில் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மேலும் விற்பனை செய்யப்பட உள்ள கீழ் குறிப்பிட்டுள்ள 29 மனைகளுக்கும் ஆய்வுகட்டணம் பார்வை (3) மற்றும் நிலப்பயன் மாற்றக்கட்டணங்கள் பார்வை(4)-ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தின் படி உரிய தலைப்புகளில் செலுத்தி அதற்கான ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்தும், அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்) துறை நாள் 04.05.2017 பார்வை (5)-ல் குறிப்பிட்டுள்ள புங்கனூர் ஊராட்சி மன்றத் தலைவர் தீர்மான எண்:25 நாள்: 05/07/2024-ன் படி கீழ்குறிப்பிட்டுள்ள உத்தேச குடியிருப்பு 29 மனைகளுக்கும் அங்கீகாரம் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

உத்தேச குடியிருப்பு விற்பனை செய்ய உள்ள மனை எண்கள் விவரம்
மனை எண்: 1 முதல் 29 வரை,

J Amb
தலைவர்
புங்கனூர் ஊராட்சி மன்றம்
திமிரி ஊராட்சி ஒன்றியம்

நகல்: திரு.நாமதேவன்
எண்: 24, பிள்ளையார் கோவில் தெரு,
சலமநத்தம், கம்வான்பேட்டை அஞ்சல் வேலூர் வட்டம்,
வேலூர் – 632319.
நகல்: சார்-பதிவாளர், சார்பதிவாளர்அலுவலகம், ஆற்காடு-632503.
நகல்: நகர் ஊரமைப்பு இணை இணக்குநர், இராணிபேட்டை-632401.